DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.16/ 2020 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **லோகேஷ்வரன்** |
| Father's Name | : | ரவிச்சந்திரன் |
| Village | : | கணக்கண்குடி |
| Taluk | : | திருப்புவனம் |
| Calling | : | சலூான் கடை |
| Religion | : | இந்து |
| Age | : | 21/2024 |

**(வழக்கின் 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி இறப்பு .)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 20.12.2024

**முதல் விசாரணை:**

நான் தற்போது கணக்கன்குடியில் குடியிருந்து வருகிறேன். திருப்புவனத்தில் எனது மாமா செந்தில் என்ற வீரக்குமாரின் கவின் சலூான் கடையில் நான் ஆறு மாத காலமாக தொழில் செய்துவருகிறேன். எனது மாமா சலூான் கடையானது பூங்கா நகருக்கு அருகில் உள்ளது. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் உள்ள எதிரியை அவர் என்னை வெட்டும்போது பார்த்துள்ளேன். மற்றொரு எதிரியான கணேசன் தற்போது உயிருடன் இல்லை. 23.08.2019 ம் வருடம் இரவு சுமார் 9.30 மணியளவில் நானும், எனது மாமா கடையில் வேலை முடித்துவிட்டு கடையை பூட்டிவிட்டு நானும் எனது மாமாவும் சென்றோம். எனது மாமாஅவரது வீட்டிற்கு சென்றுவிட்டார். நான் பானிபூரி சாப்பிட்டுவிட்டு திருப்புவனத்தில் பஞ்சாயத்து

யூனியன் அலுவலகம் அருகே வந்தபோது அந்த வழியாக வந்த எனது நண்பர் விக்கி என்பவரை பார்த்து பேசிக்கொண்டிருநதேன் அப்போது அன்றைய தினம் இரவு 9.40 இருக்கும். எதிரிகள் ஹரிகரனும், கணேசனும் குடிபோதையில் ஒருவருக்கொருவர் தள்ளி விளையாடிக் கொண்டிருந்தார்கள். நான் மதுரை - ராமநாதபுரம் மெயின்ரோட்டில் இடது புறமாக நானும் விக்கி என்பவரும் பேசிக்கொண்டிருந்தோம் எங்களுக்கு எதிரே ரோட்டின் வலது புறமாக எதிரிகள் இருவரும் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் நாங்கள் எதிரிகள் சண்டை போடுவதை பார்த்து விலகிசென்றோம். நான் கிழக்கு திசையை நோக்கியும் விக்கி மேற்கு திசையை நோக்கி நின்றிருந்தோம். அப்போது ஒரு கார் எங்களை கடந்து சென்றது அதன்பிறகு எதிரி ஹரிகரன் என்னை என்னடா தேவடியா மகனே செத்து தொலைடா என்று வாளால் எனது கழுத்தை நோக்கி வெட்ட வந்தார் நான் அந்த வாள் வெட்டை எனது இடது கை தடுத்தபோது அந்த வெட்டு எனது இடது கை மணிக்கட்டில் பட்டு காயம் ஏற்பட்டது. நான் எதிரி ஹரிகரன் வெட்டை எனது இடது கையால்தடுத்தபோது வாளின் நுனி பகுதி எனது தலையி்ன் பின்புறம்பட்டு காயம் ஏற்பட்டதாக சொன்ன சாட்சி தனது இடது கை மற்றும் கழுத்தின் பின்புறமுள்ள காயத்தழும்புகளை காண்பிக்கிறார். என்னுடன் இருந்த விக்கி ஓடிவிட்டார். நான் வெட்டுப்பட்ட எனது இடது கையை பிடித்து கொண்டு வீட்டிற்கு வந்தபோது வரும்வழியில் எனது தாத்தா ராசு என்பவரை ஸ்டேட் பேங் அருகில் பார்த்தேன். உடனே எனது தாத்தா என்னை அந்த வழியாக வந்த ஆட்டோவில் ஏற்றி திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். அதன்பிறகு 108 ஆம்புலன்சு மூலம் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில்

உள்நோயாளியாக இருந்தபோது திருப்புவனம் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் போலிசாரிடம் சொன்னேன் போலிசார் எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1** ஆகும். எனக்கு வெட்டு விழுந்தவுடன் நான் காயத்தை மட்டும் பார்த்ததால் வாளை பார்க்கவில்லை. ஆனால் வாளால்தான் வெட்டினார். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை (வழக்கறிஞர் ஆஜர்)

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2024.12.20 09:36:12 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.